திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9 சமூக நலக் கூடங்கள் பழுதடைந்த நிலையிலே இருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அறிந்த வரையிலே, என்னுடைய தொகுதியிலே ஜட்காபுரத்திலே ஒரு திருமண மண்டபமும், எழும்பூர் தொகுதியிலே அவதானம் பாப்பையர் தெருவிலே ஒரு திருமண மண்டபமும் கட்டப்பட்டு, திறக்கப்பட்டு 3 வருஷங்கள் ஆகியும்—3 வருஷங்களுக்கு மேலாகியும் இருக்கிறது.—இந்த 3 வருஷ காலத்திலே ஒரு நிகழ்ச்சிகூட இந்த 2 திருமண மண்டபங்களிலே நடத்தப்பெறவில்லை. அப்படியானால், மக்களுக்குத் தேவையில்லாத இடங்களில் கட்டியதற்கு யார் பொறுப்பு? இனி அவற்றைப் பயன்படுத்துவதற்கு என்ன முயற்சியை அரசாங்கம் எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-க்குப் பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மாவினுடைய அரசு பொறுப்புக்கு வந்த பிறகு எந்தத் திருமணக் கூடமும் தேவையற்ற இடங்களில், மக்களுக்குப் பயன்படாத இடங்களில் கட்டப்படவில்லை என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இது மூன்று ஆண்டுகளுக்கு முன் கட்டிய திருமண மண்டபம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், குறிப்பாக இதற்குத் தனியாக எந்த ஆண்டில் கட்டப்பட்ட திருமண மண்டபம் என்ற வினாவுடன் கூடிய-அதற்குண்டான வினா-தனி வினா போட்டால் அதற்குண்டான முழுமையான, விவரமான பதில் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, திருமதி சசிகலா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

17—

கால்நடை மருத்துவமனை

***18441—திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடவூர் ஊராட்சி ஒன்றியம், பாலவிடுதி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவங்க அரசு ஆவன செய்யுமா?

2003 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

திருமதி ஆர். சசிகலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள், தற்போது இதில் செயற்குறிப்பு ஏதுமில்லை என்று தெரிவித்தார்கள். கடவூர் ஒன்றியம், பாலவிடுதி ஊராட்சியில் அதிகமான கால்நடைகள் உள்ளதால் அவர்கள் மருத்துவமனைக்கு 13 கிலோ மீட்டர் தூரம் செல்ல இருப்பதால், வருகின்ற நிதியாண்டிலாவது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று துவக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கடவூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும், ஒரு கால்நடை மருந்தகமும் 3 கால்நடைக் கிளை நிலையங்களும் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சகோதரி அவர்கள் குறிப்பிட்டுள்ள கடவூர் ஊராட்சி ஒன்றியம், பாலவிடுதி ஊராட்சிக்கு அருகில் கால்நடை மருந்தகங்களோ, கால்நடைக் கிளை நிலையங்களோ இல்லை. அப்பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 13,000 ஆகும். வரும் நிதியாண்டில் புதிய கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்படும்போது பாலவிடுதி ஊராட்சிப் பகுதியில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தப்படுவது பற்றி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, திரு. ஜே. ஹேமச்சந்திரன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.